1982 மார்ச் 23]

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை அறைகள் கொண்ட விடுதிக் கட்டிடம் ஆண்களுக்காக கட்டப்படுகிறது. அதேபோல எத்தனை அறைகளைக் கொண்ட விடுதி கட்டிடம் பெண்களுக்காக கட்டப்படுகிறது? எவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். .வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,, ஜி.ஓ. எம்.எஸ். நெம். 1366, ஹெல்த் மற்றும் பேமிலி வெல்பேர்ல், தேதி 3–8–1979–இல் 23·80லட்சம் ரூபாய் அளவுக்கு ஆண்களுக்கு விடுதி கட்டுவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல ஜி. ஓ. எம்.எஸ் நெ. 1386, ஹெல்த் மற்றும் பேமிலி வேல்பேர், தேதி 4–8–79–ல் ரூபாய் 7·75 லட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்கு விடுதிக் கட்டிடம் கட்டுவதற்கென்று உத்தரவு போட்டிருக்கிறோம்.

புதுக்கோட்டை சென்னை-விரைவுப் பேருந்துப்பணி.

*வினா எண். 622—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை-சென்னைக்குஅரசு பேருந்துகள் விடும் உத்தேசமுண்டா?

(ஆ) இல்லையெனில் பேருந்துகள் விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) 9–2–81 முதல் இத்தடத்தில் இரு விரைவுப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல கேள்வி வரும் முன்பே, அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி, நன்றி. நன்றி. அது மட்டுமல்லாமல், தற்போது புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு வரும் பேருந்துகளில் அதிகமான அளவில் நெரிசல் ஏற்பட்டு விட்டதால், மேலும் 2 பேருந்துகளை விட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே அவருடைய பாராட்டுதலுக்கு நன்றி. கேள்வியை இப்போது, தான் கேட்டிருக்கிறார். பின்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுநேரம் பயணம் செய்யும் பேருந்துகளில், பயணச் சிரமம் பிரயாணிகளுக்கு ஏற்படாமல் இருக்க தூங்கும் வசதி கழிப்பிட வசதி, தொலைக் காட்சி வசதி போன்றவசதிகளைச் செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய அறையிலே இருப்பது போன்ற எல்லா வசதிகளும் பஸ்களில் வேண்டும் என்கிறார். அந்த வகையிலேதான் நாங்களும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே முதற்கட்டமாக 2 பேருந்துகளைத் தயார் செய்திருக்கிறோம். அவைகள் எப்படி வெற்றிகரமாக இருக்கிறது என்பதைப் பார்த்து, தொடர்ந்து விரிவாகச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் ஓடிக்கொண்டிருக்கும் ஆம்னி பஸ்கள்.

*வினா எண். 623 திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு அனுமதி வழங்கியுள்ள ஆம்னி பஸ்கள் எத்தனை ஓடிக்கொண்டிருக்கின்றன.?

(ஆ) அவைகளில் மிக உயர்வான கட்டணங்கள் வசூலிக்கப் படுவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் கட்டணங்களை நிர்ணயம் செய்ய அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

(ஈ) ஆம்னி பஸ்களின் போட்டியினால் அரசு போக்குவரத்துக் கழகங்கள் நட்டமடைவது உண்மையா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; (அ) 96

(ஆ) அவ்வாறான புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(இ) எழாது

(ஈ) ஆம்

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்த பேருந்துகள் 96 ஓடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பேருந்துகள் 96க்கு மேலும் பல பேருந்துகள் ஓடுகின்றன என்ற புகார்கள், பொதுமக்கள் மத்தியிலே இருந்து வந்திருக்கின்றனவா. அந்தப் பேருந்துகளிலே யெல்லாம் வசூலிக்கப்படுகிற கட்டணங்கள், அரசுப் பேருந்துகளில் வசூலிப்பதை விட மிக அதிகமான கட்டணங்களாக வசூலிக்கப் படுவது பற்றியும் ஏதாவது புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.